# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 90/மா/2025
நாள் 11.11.2025

M. செல்லம்
திருப்பூர் --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர்
திருப்பூர் மாநகராட்சி

(2) தலைவர்,
தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியம்
பாரதி நகர் குடியிருப்போர் நலச் சங்கம்
திருப்பூர் --- எதிர் மனுதாரர்கள்

திருப்பூர், வாவிபாளையம் (P.O.), பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, பிளாக் 2, கதவு எண் 50. என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. செல்லம் என்பவரின் 17.02.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.02.2025 அன்று பெறப்பட்டு 90/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருப்பூர், வாவிபாளையம் (P.O.), பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, பிளாக் 2, கதவு எண் 50. என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. செல்லம் என்பவர் 17.02.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"மனுதாரர் ஆகிய நான் மேலே காணும் முகவரியில் குடியிருந்து வருகிறேன். இந்திய அரசியலமைப்பு 1950 கோட்பாடு, 5(அ) இன்படி நான் ஒரு இந்திய குடிமகன் ஆவேன். மேலும் இந்திய திருநாட்டை முன்னேற்றி செல்வதற்காக இந்திய அரசியலமைப்பு 1950 கோட்பாடு 51 (அ)(ஒ) இன்படி இந்திய அரசு துறைக்கும் இந்திய நீதித்துறைக்கும் உதவும் முகமாக பத்து ரூபாய் இயக்கம் (தகவல் உரிமைச் சட்டம் ஆர்வலர் அமைப்பு) ஆகிய அமைப்புகளில் கூட்டாகவும், தனிப்பட்ட முறையிலும் சமூக சேவை ஆற்றி வருகிறேன்.

மனுதாரர் ஆகிய நான் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு தாலுகா, நெருப்பெரிச்சல் கிராமம் பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு கதவு எண் 50 என்ற முகவரியில் குடியிருந்து

வரும் முத்தையா என்பவரின் மகன் M. செல்லம் வயது 35 ஆகிய நான் அகத்தூய்மையோடும்/ உளப்பூர்வமாகவும் / எவ்வித உள்நோக்கமும் இன்றியும் வழங்கும் (அபிடவிட்டு) சத்திய பிரமாணம் யாதெனில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நிர்வாகப் பொறியாளர் அவர்களுக்கு பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் கூடிய புகார் கடிதம் 16.11.2024 அன்று அனுப்பி இருந்தேன். அக்கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் திருப்பூர் மாநகராட்சி சட்டவிதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி பெறாமலும், வாரியத்தின் அனுமதி பெறாமலும், நாய் வளர்க்கப்படுகிறது என்றும், இங்கு மொத்தம் 288 வீடுகள் உள்ளன என்றும், இங்கு ஒரு சிலர் செல்லப் பிராணிகள் என்ற பெயரில் நாய், பூனை போன்றவற்றை வளர்க்கின்றனர் என்றும், இவற்றில் ஒரு வீட்டின் நாய் என்னை கடிப்பதற்காக துரத்தி வந்தது. நான் அவற்றிலிருந்து நூல் அளவில் தப்பினேன் என்றும், அதில் குறிப்பிட்டிருந்தேன். மேலும் தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு விதிமுறைகள் அரசாணை வெளியிட்டுள்ளது. அந்த அரசாணைகளில் கூட குடியிருப்பவர்களை தொல்லை செய்யும் வகையில் ஒலி எழுப்பக் கூடாது. உள்ளாட்சி விதிமுறைகள் உட்பட்டு தான் செல்ல பிராணி வளர்க்க வேண்டும் உள்ளிட்ட விதிமுறைகள் இடம் பெற்றிருந்தன. ஆனால் இங்கு வளர்க்கப்படும் நாய் முறையாக அனுமதி பெறாமல்தான் வளர்க்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டு இருந்தேன்.

இங்கு வளர்க்கும் நாய்களினால் அக்கம் பக்கத்தினருக்கு தொல்லைகள் அதிகமாக உள்ளது. இரவில் நாய்கள் குரைப்பதால் தூக்கம் கெடுகிறது என்பதாலும், நாய்கள் வளர்ப்பதால் துர்நாற்றம் ஏற்படுகிறது என்பதாலும், இதைப்பற்றி நாய்கள் வளர்ப்பவர்களிடம் தெரிவித்தால், சண்டைக்கு வருவதாகவும், இவற்றினால் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படுவதாகவும், இதற்கு முழுமையான தீர்வாக நாய்களை அப்பறப்படுத்த வேண்டியும், நாய்கள் வளர்ப்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் பொது மக்கள் சார்பாகவும், சமூக ஆர்வலர்கள் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன் என குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் சென்னை உயர்நீதிமன்றம் R.C. No.1195 of 2009 and M.P. No.1 of 2009 நாள் 23.12.2009 என்ற வழக்கில் கூட அடுக்குமாடி குடியிருப்பில் நாய்கள் வளர்க்கக் கூடாது என உத்திரவிட்டுள்ளது என்பதையும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நிர்வாக பொறியாளர் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நடவடிக்கை ஏதுமில்லை.

இவை சம்பந்தமாக தினத்தந்தி, தினமலர், அம்மா எக்ஸ்பிரஸ் நாளிதழிலும் கூட செய்திகள் வெளிவந்தன. ஆனால் நடவடிக்கை ஏதுமில்லை.

மேலும், 04.12.2024 நாளிட்ட கடிதம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் திருப்பூர் ஆணையர் அவர்களுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருப்பூர் கோட்டம் நெருப்பரிச்சல் கிராமம் பாரதி நகர் பகுதி–1–AHP குடியிருப்பு திட்டப் பகுதியில் 288 பயனாளிகளுக்கு குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்ட பகுதியில் தெருநாய்கள் தொல்லை அதிகமாக உள்ளதாகவும், சாலையில் வரும் பொதுமக்களை துரத்துவதாகவும் கடிப்பதாகவும் பல தொல்லைகளை ஏற்படுத்தி வருவதாகவும் திட்டப் பகுதி மக்களால் புகார் அனுப்பப்பட்டது. இப்புகாரின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு மாநகராட்சி ஆணையர் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது என குறிப்பிட்டு கடிதத்தினை நிர்வாக பொறியாளர் அவர்கள் திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

அதன் பின்பு திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் சில திருத்தங்களை செய்து மீண்டும் அனுப்பி வைக்குமாறு 31.12.2024 அன்று பதிவஞ்சல்

மூலம் அனுப்பி இருந்தேன். அக்கடிதத்தில் தெரு நாய்களின் தொல்லை அதிகமாக உள்ளது என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அவற்றை மாற்றி திருத்தம் செய்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் திருப்பூர் மாநகராட்சியின் அனுமதி பெறாமலும் வாரியத்தின் அனுமதி பெறாமலும் நாய் வளர்க்கப்படுகிறது. அவற்றினால் பொதுமக்களுக்கும், சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் தொல்லைகள் அதிகமாக உள்ளது எனவும் பொது மக்களை துரத்துவதாகவும், கடிப்பதாகவும் எனக் குறிப்பிட்டு மீண்டும் திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்குமாறு குறிப்பிட்டு கடிதம் அனுப்பியிருந்தேன்.

மீண்டும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரியம் நிர்வாக பொறியாளர் அவர்களுக்கு நினைவூட்டல் கடிதம் பதிவு அஞ்சல் மூலம் கடந்த 07.01.2025 அன்று அனுப்பி இருந்தேன். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பிரதம மந்திரியின் தனிப்பிரிவில் மனு எண் (PM/2023/204/2024) நாள் 26.11.2024 இந்த மனுவில் பாரதி நகர் பகுதி–1–AHP குடியிருப்பு திட்டப் பகுதியில் எவ்வித அனுமதியும் பெறாமல் நாய்கள் வளர்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள, தாங்கள் மொத்தம் உள்ள 288 வீடுகளில் எந்த பிளாக்கில் எந்த குடியிருப்பு எண்ணில் வீட்டில் நாய் வளர்க்கப்படுகிறது என குறிப்பிட்டு உரிய ஆதாரத்துடன் குறிப்பிட்டு அளிக்கும் பட்சத்தில் ஆதாரத்தின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு நான் கடந்த 27.01.2025 தேதி அன்று நாய் வளர்ப்பவர்களின் பெயர் பட்டியல், அவர்கள் கதவு எண், பிளாக் ஆகியவற்றை குறிப்பிட்டு மீண்டும் கடிதம் அனுப்பி இருந்தேன்.

அதன் பின்பு எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கப்படாததால் இந்திய அஞ்சல் சட்டம் 1898 பிரிவு-28–இன் கீழ் ஒப்புதல் அட்டையுடன் கடந்த 27.01.2025 தேதி அன்று எனது புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காததால் பாரதிய சாச்சிய ஆதினியம் (BSA)-2023 பிரிவு 104 இன் கீழ் சட்ட படியான அறிவிப்பு அனுப்பப்பட்டது.

இந்த சட்ட அறிவிப்பில் கூட மனுதாரர் ஆகிய எனது புகார் மனு மீது நிறைவேற்றவை செய்யாத பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சட்டம் 2014 பிரிவு 3–இன்படி தங்கள் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை முறையிடுவேன் என குறிப்பிடப்பட்டு இருந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் இதற்காக நஷ்ட ஈடு தொகையான ரூபாய் பத்து லட்சம் மற்றும் வழக்கு செலவினங்கள் ஆகியவற்றிற்கு தாங்களை தார்மீக பொறுப்பு ஏற்க நேரிடும் என்றும், அதில் குறிப்பிடப்பட்டிருந்தேன். ஆனால் எவ்வித நடவடிக்கையும் நிர்வாகப் பொறியாளர் அவர்கள் எடுக்கவில்லை.

திருப்பூர் ஆணையர் அவர்களுக்கு கடந்த 16.11.2024 அன்று பதிவஞ்சல் மூலம் ஒப்புகை அட்டையுடன் புகார் கடிதம் அனுப்பி இருந்தேன். அந்த கடிதத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் எவ்வித அனுமதியும் பெறாமல் நாய்கள் வளர்க்கப்படுகிறது. இந்த நாய்களினால் பொதுமக்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுகிறது. நாய்கள் வளர்ப்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும், நாய்களை அப்புறப்படுத்த வேண்டிய புகார் கடிதம் திருப்பூர் ஆணையர் அவர்களுக்கு அனுப்பி இருந்தேன். ஆனால் திருப்பூர் ஆணையர் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மீண்டும் நினைவுபடுத்துவதற்காக கடந்த 07.01.2025 அன்று நினைவூட்டல் கடிதம் அனுப்பி இருந்தேன். ஆனால் அதற்கும் எவ்வித பதிலும் திருப்பூர் ஆணையர் அவர்கள் வழங்கவில்லை.

மேலும் 27.01.2025 தேதியன்று இந்திய அஞ்சல் சட்டம் 1898–ல் பிரிவு 28 இன் கீழ் ஒப்புதல் அட்டையுடன் பதிவஞ்சலில் எனது புகார் கடிதத்திற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் பாரதிய சாச்சிய ஆதினியம் (BSA)-2023 பிரிவு 104இன் கீழ் சட்டப்படி அறிவிப்பு அனுப்பி இருந்தேன். ஆனால் அதற்கும் எவ்வித பதிலும் வழங்கவில்லை.

திருப்பூர் உதவி ஆணையர் அவர்களுக்கு கடந்த 16.11.2024 அன்று பதிவஞ்சல் மூலம் ஒப்புகை அட்டையுடன் புகார் கடிதம் அனுப்பி இருந்தேன். அந்த கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் எவ்வித அனுமதியும் பெறாமல் நாய்கள் வளர்க்கப்படுகிறது. இந்த நாய்களினால் பொது மக்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுகிறது. நாய்கள் வளர்ப்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும், நாய்களை அப்புறப்படுத்த வேண்டி புகார் கடிதம் திருப்பூர் ஆணையர் அவர்களுக்கு அனுப்பி இருந்தேன். ஆனால் திருப்பூர் உதவி ஆணையர் அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மீண்டும் நினைவுபடுத்துவதற்காக கடந்த 07.01.2025 அன்று நினைவூட்டல் கடிதம் அனுப்பி இருந்தேன். ஆனால் அதற்கும் எவ்வித பதிலும் திருப்பூர் உதவி ஆணையர் அவர்கள் வழங்கவில்லை.

கடந்த 27.01.2025 தேதியன்று இந்திய அஞ்சல் சட்டம் 1898-ல் பிரிவு 28இன் கீழ் ஒப்புதல் அட்டையுடன் பதிவஞ்சலில் எனது புகார் கடிதத்திற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் பாரதிய சாச்சிய ஆதினியம் (BSA)–2023 பிரிவு 104 இன் சட்டப்படி அறிவிப்பு அனுப்பி இருந்தேன். ஆனால் அதற்கும் எவ்வித பதிலும் வழங்கவில்லை.

மனுதாரர் இந்த தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனுதாரர் கேட்கும் பரிகாரம் என்னவென்றால் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் அனுமதி பெறாமல் வளர்க்கும் நாய்களினால் மிகத் துன்பத்துக்கு ஆளாகின்றேன். நாய் துரத்தி வருகிறது. கடிக்க வருகிறது. நாய்களினால் துர்நாற்றம் ஏற்படுகிறது. அங்கங்கே அசிங்கத்தை செய்து வைக்கிறது. சிறுநீரகம் கழித்து வைக்கிறது. இதனால் துர்நாற்றம் வீசுகிறது.

இரவில் குரைப்பதால் என்னால் தூங்க முடியவில்லை. மிகவும் துன்பத்திற்கு ஆளாகிறேன். ஆகவே நாயை முழுமையாக அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து அப்புறப்படுத்த வேண்டியம், மேலும், நடவடிக்கை எடுக்கத் தவறிய நிர்வாக பொறியாளர் அவர்கள் மீதும் திருப்பூர் ஆணையர் அவர்கள் மீதும், திருப்பூர் உதவி ஆணையர் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கும்படியும், மேலும் மிகுந்த மன உளைச்சலுக்கு நான் ஆளாகி இருக்கிறேன். இதனால் எனக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தரும்படியும் தங்களை பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

ஆகையால், இந்திய அரசியல் சாசனம் 1950 கோட்பாடு 14-இன்படி நாட்டின் எந்த குடிமகனுக்கும் சட்டத்தின் முன்பு சம உரிமையும் சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பையும் வழங்க அரசு மறுக்கக் கூடாது. இந்திய அரசியல் சாசனம் 1950 கோட்பாடு 39A-இன்படி எந்த குடிமகனுக்கும் தன் பிரச்சனைகளில் நீதி வழங்கப்படா இருப்பதைத் தவிர்ப்பதற்கு உண்டான வழிவகைகளை காண வேண்டும் என்கின்ற அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கையை நிறைவேற ஆணை செய்ய வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 29.04.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் எச்3/2372=2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

“புகார்தாரர் திரு. செல்வம் த/பெ முத்தையா, பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, திருப்பூர் அவர்களால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் நடுவர் முறைமன்றம், சென்னை அவர்களிடத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புகார் மனுவிற்கான எழுத்து பூர்வமான அறிக்கை அனுப்ப தெரிவிக்கப்பட்டதால், திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விரிவான அறிக்கையும், அதற்கான ஆவணமும் மாண்பமை முறைமன்ற நடுவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் நடுவர் முறை மன்றம், அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. புகாரின் நிகழ்விடமான தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம், பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, திருப்பூர் என்ற இடமானது நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் ஆளுமையின் கீழ் இயங்கி வருகிறது. ஆகவே, புகார்தாரர் திரு செல்லம் த/பெ முத்தையா அவர்களால் நாய் தொந்தரவினை முறையாக கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக 16.11.2024 அன்று நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வரின் தனிப்பிரிவு புகார் கடிதம் நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.

**ஆவணம் எண் 1**

2. புகார்தாரர் திரு. செல்லம் த/பெ முத்தையா அவர்களின் புகாரின் பேரில் நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு புகார் மனு மாறுதல் செய்யப்பட்டு தெரு நாய்களின் தொல்லை அதிகமாக உள்ளதாகவும், அவற்றை கட்டுப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள 13.12.2024அன்று புகார் மனு மாற்றக் கடிதம் சமர்ப்பிக்கப்படுகிறது.

**ஆவணம் எண் 2**

3. புகார்தாரர் திரு. செல்லம் த/பெ முத்தையா அவர்களின் புகார் மனு கிடைக்கப் பெறுவதற்கு முன்பே மாநகராட்சி மூலம் நாய் தொல்லைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு 01.05.2024 தேதி முதல் பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, சமத்துவபுரம் வாவிபாளையம் பகுதிகளில் மாண்புமிகு தலைவர், விலங்குகள் நல வாரியம், வனம் மற்றும் சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் மிருகவதை தடை மத்திய சட்டம் 1960 பிரிவு 4–ல் கண்டுள்ள விளக்கவுரைகளின் 26.02.2025 தேதிய சுற்றறிக்கையின், அரசு வழிகாட்டுதல்படி தெரு நாய்கள் பிடிக்கப்பட்டது. இதுநாள்வரை அப்பகுதியில் (வார்டு எண் 4,5) தெருநாய்களை பிடித்து கருத்தடை செய்து மீண்டும் பிடிக்கப்பட்ட இடத்திலேயே நாய்களை இறக்கிவிட்டு அப்பகுதி மாமன்ற உறுப்பினர்கள், சுகாதார ஆய்வாளர், சுகாதார அலுவலர் மற்றும் நம்பத்தகுந்த சாட்சியங்களின் அலைபேசி எண்ணுடன் கையொப்பம் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்ததற்கான ஆவணம் சமர்ப்பிக்கப்படுகிறது.

**ஆவணம் எண் 3**

4. புகாரின் நிகழ்விடமான தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம், பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, திருப்பூர் என்ற இடமானது நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் ஆளுமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்பகுதியில் சுற்றுச்சுவரும், நுழைவாயிலும் இல்லாததால் தெரு நாய்கள் தடையின்றி உள்ளே வர காரணமாக அமைகிறது. அதனால் புகார் வந்த வண்ணம் உள்ளதால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களுக்கு 12.12.2024 அன்று விரிவான அறிக்கையினை மாநகர நல அலுவலர் மூலம் அனுப்பி வைத்து அதன் நகலை புகார்தாரர் திரு. செல்லம் த/பெ முத்தையா அவர்களுக்கும் அனுப்பப்பட்டதன் நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.

**ஆவணம் எண் 4**

5. புகார்தாரர் திரு. செல்லம் த/பெ முத்தையா அவர்களின் புகாரின் மீது விரிவான விசாரணை மேற்கொண்டதில் புகார்தாரர் பிளாக் எண் 2 கதவு எண் 50 குடியிருப்பதாகவும் அங்கு வசிக்கும் பெண்களை படம் பிடித்து தவறான முறையில் தொந்தரவு செய்வதாகவும், இரவு நேரத்தில் பெண்களை தனது வீட்டிற்கு வரவைப்பதால் நாய்கள் குரைத்து குடியிருப்பு வாசிகளை தூங்கவிடாமல் செய்வதோடு பெண்களுக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது என்றும், அவர்மீது சட்ட நடவடிக்கை எடுக்க கோரி பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு நலச் சங்கம் மற்றும் பொது மக்களும் காவல் ஆணையாளர், திருப்பூர் அவர்களுக்கு புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பல குற்ற வழக்குகள் புகார்தார் மீது காவல் நிலையத்தில் உள்ளதற்கான ஆவணம் சமர்ப்பிக்கப்படுகிறது.

**ஆவணம் எண் 5**

6. பாரதி நகர், அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் நாய் வளர்ப்போர் பற்றிய கணக்கெடுக்கப்பட்டதில் மொத்தம் 9 பிளாக்கில் 288 வீடுகளில் 5 வீடுகளில் மட்டுமே செல்லப்பிராணியாக நாய்கள் வளர்க்கப்படுகிறது. அவற்றை கட்டிப்போட்டும் யாருக்கும் இடையூறு இல்லாமலும் முறையாக தடுப்பூசி போடப்பட்டு வளர்க்கப்படுவது தெரிகிறது. நாய் வளர்க்கும் 5 வீட்டின் உரிமையாளருக்கும் தமிழ்நாடு பொதுசுகாதாரச் சட்டம் 1939 பிரிவு 41, 44–ன் கீழ் நோட்டீஸ் 17.04.2025 அன்று வழங்கப்பட்டு முறையாக மாநகராட்சியிலும், நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களிடத்திலும் அனுமதி பெற்று வழிகாட்டுதலை பின்பற்றி நாய் வளர்க்க அறிவுறுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கட்டுப்பாட்டில் வருவதால் நாய் வளர்க்கும் 5 வீட்டின் உரிமையாளர்கள் மீது அடுக்குமாடி குடியிருப்பு வழிகாட்டுதல்படி மேல்நடவடிக்கை தொடர நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருப்பூர் அவர்களுக்கு 21.04.2025 அன்றைய தேதிய வரைவு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான பட்டியல் சமர்ப்பிக்கப்படுகிறது.

**ஆவணம் எண் 6**

7. மேலும், பிளாக்–1 கதவு எண் 28–ல் குடியிருந்து நாய் வளர்க்கும் திரு. முத்துசண்முகம் த/பெ ராமலிங்கம் அவர்களுக்கு தமிழ்நாடு பொதுசுகாதாரச் சட்டம் 1939 பிரிவு 41, 44–ன் கீழ் நோட்டிஸ் வழங்கி அருகில் வசிப்போருக்கு இடையூறு இல்லாமலும், நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு

வாரியம் அவர்களின் வழிகாட்டுதலை பின்பற்ற கோரி நோட்டிஸ் வழங்கப்பட்டது மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டது.

**ஆவணம் எண் 7**

8. நோட்டிஸ் பெற்றுக்கொண்ட நாய் வளர்க்கும் திரு. முத்துசண்முகம் த/பெ ராமலிங்கம் அவர்கள் பாரதி நகர், அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் வசித்து நாயினை கட்டிப் போட்டும், யாருக்கும் இடையூறு இல்லாமலும் முறையாக தடுப்பூசி போடப்பட்டும் வளர்த்து வருவதாகவும், இப்புகார்தாரரை தவிர வேறு யாரும் பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு நல சங்கமும் மற்றும் பொது மக்களும் நாய் தொந்தரவு சம்பந்தமாக புகார் அளிக்கவில்லை. எனக்கும் அவருக்கும் இருக்கும் முன்பகை மற்றும் காழ்ப்புணர்ச்சி காரணமாக தொடர்ந்து பொய் அளித்து வருவதாகவும் தான் 1–ம் பிளாக் க. எண். 28 ல் மூன்றாவது மாடியில் வசிக்கிறேன். புகார்தாரர் 2வது பிளாக் க. எண் 50–ல் வீட்டில் கீழ் தளத்தில் வசிக்கிறார். இருப்பினும் என்மீது இருக்கும் முன்பகை மற்றும் காழ்ப்புணர்ச்சி காரணமாக தொடர்ந்து என்மீது பொய் புகார் அளித்து வருவதாகவும் எழுத்து மூலம் பதில் அளித்துள்ளார். இப்புகார்தாரரை தவிரவேறு யாரும் பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு நல சங்கமும் மற்றும் பொது மக்களும் நாய் தொந்தரவு சம்பந்தமாக என் மீது புகார் அளிக்கவில்லை. அதன் நகல் ஆவணம் சமர்ப்பிக்கப்படுகிறது.

**ஆவணம் எண் 8**

9. புகார்தாரர் திரு. செல்லம் த/பெ முத்தையா அவர்கள் மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களிடத்தில் தாக்கல் செய்த தனது புகார் மனுவில் இரவு நேரத்தில் நாய்கள் குரைத்து தன்னை தூங்க விடாமல் செய்வதோடு துன்பத்திற்கு ஆளாவதாகவும் அதற்காக புகார் கொடுத்தும் நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களும், மாநகர ஆணையாளர், திருப்பூர் அவர்களும் புகார்தாரர் மனுமீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அதனால் மேற்கண்ட இருதுறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

புகார்தாரர் திரு. செல்லம் த/பெ முத்தையா அவர்களின் புகார் மீது விரிவான விசாரணை மேற்கொண்டதில் புகார்தாரர் பிளாக் எண் 2 கதவு எண் 50 குடியிருப்பதாகவும் அங்கு வசிக்கும் பெண்களை படம் பிடித்து தவறான முறையில் தொந்தரவு செய்வதாகவும், இரவு நேரத்தில் பெண்களையும் வெளியாட்களையும் தனது வீட்டிற்கு வரவைப்பதால் தெருநாய்கள் குரைத்து அங்கு வசிக்கும் குடியிருப்பு வாசிகளை தூங்கவிடாமல் செய்வதோடு பெண்களுக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது என்றும், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க கோரி பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு நல சங்கம் மற்றும் பொதுமக்களும் காவல் ஆணையாளருக்கு புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பல குற்ற வழக்குகள் புகார்தாரர் மீது காவல்நிலையத்தில் உள்ளது என தெரிவித்துள்ளனர். மேலும் மாநகர ஆணையாளர், திருப்பூர் அவர்களால் எடுக்கப்பட்ட அனைத்து தேவையான நடவடிக்கைகளின் விரிவான எழுத்துபூர்வ அறிக்கை மாண்பமை முறைமன்ற நடுவர் அவர்களிடத்தில் மேலான பரிசீலனைக்கு ஆவணமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

**ஆவணம் எண் 9**

எனவே, பாரதி நகர், அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் நாய் வளர்ப்போர் பற்றிய கணக்கெடுக்கப்பட்டதில் மொத்தம் 9 பிளாக்கில் 288 வீடுகளில் 5 வீடுகளில் மட்டுமே

செல்லப் பிராணியாக நாய்கள் வளர்க்கப்படுகிறது. அவற்றை கட்டிப் போட்டும், யாருக்கும் இடையூறு இல்லாமலும் முறையாக தடுப்பூசி போடப்பட்டு செல்லப் பிராணியாகவும், பாதுகாப்பிற்காகவும் நாய் வளர்க்கப்பட்டு வருவதாகவும் நாய் தொந்தரவு குறித்து 288 வீட்டில் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பு நல சங்கமும் மற்றும் பொதுமக்களும் நாய் தொந்தரவு சம்பந்தமாக புகார் அளிக்கவில்லை. மேலும், புகாருக்கான நடவடிக்கை குறித்து விரிவான எழுத்துபூர்வ அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி மாநகர ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும், அக்குடியிருப்பில் வசிக்கும் பெண்களை படம் பிடித்து தவறான முறையில் தொந்தரவு செய்வதாகவும், இரவு நேரத்தில் பெண்களையும், வெளியாட்களையும் அவருடைய வீட்டிற்கு வரவைப்பதால் நாய்கள் குரைத்து குடியிருப்பு வாசிகளை தூங்கவிடாமல் செய்வதோடு பெண்களுக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது என்றும், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க கோரி பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு நல சங்கம் மற்றும் பொதுமக்களும் காவல் ஆணையருக்கும், காவல் ஆய்வாளருக்கும் புகார் அளிக்கப்பட்டுள்ளதையும், மேலும் பல குற்ற வழக்குகள் புகார்தார் மீது காவல்நிலையத்தில் உள்ளதையும் திசை திருப்பும் நோக்கில் ஒரு தனிப்பட்ட நபரின் விருப்பு, வெறுப்பு மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைக்கு மாநகராட்சி நிர்வாகம், ஒத்துழைக்கவில்லை என்பதற்காக இப்புகார் மனு இம்மாமன்றத்தில் மாண்பமை முறைமன்ற நடுவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் நடுவர் முறை மன்றம், சென்னை அவர்களின் முன்பு புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் புகாரில் கண்ட தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு பாரதி நகர் திருப்பூர் பகுதியில் நாய் வளர்ப்போர் பற்றிய கணக்கெடுக்கப்பட்டதில் மொத்தம் 9 பிளாக்கில் 288 வீடுகளில் 5 வீடுகளில் மட்டுமே செல்லப்பிராணியாக நாய்கள் வளர்க்கப்படுகிறது. அதனால் இங்கு வசிக்கும் பொதுமக்களுக்கான எங்களுக்கு எந்த இடையூறும் இல்லை என்று அடுக்குமாடி குடியிருப்பு நலச் சங்கம் தெரிவித்துள்ளது. மேலும் மாண்புமிகு தலைவர் விலங்குகள் நல வாரியம், வனம் மற்றும் சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் மிருகவதை தடை மத்திய சட்டம் 1960 பிரிவு 4–ல் கண்டுள்ள விளக்கவுரைகளின் 26.2.2015 தேதிய சுற்றறிக்கையின் படியும், இந்திய அரசியல் அமைப்பு சட்டம் 1950 பிரிவு 51(A)–ன்படியும் அடுக்குமாடி குடியிருப்பில் வளர்க்கப்படும் செல்லப்பிராணியான நாய்களை கையாளுதல் மற்றும் விளக்க உரைகள் குடியிருப்பில் வசிக்கும் பொது மக்கள் பின்பற்றுகிறோம் என்றும், இதுவரை இங்கு வசிக்கும் பொதுமக்களும், அடுக்குமாடி குடியிருப்பு நலச்சங்கமும் அடுக்குமாடி குடியிருப்பில் செல்லப் பிராணிகளை வளர்க்க ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றும் கடிதம் அளித்துள்ளனர். மேலும், மாண்புமிகு தலைவர் விலங்குகள் நல வாரியம், வனம் மற்றும் சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் மிருகவதை தடை மத்திய சட்டம் 1960 பிரிவு 4-ல் கண்டுள்ள விளக்கவுரைகளின் 26.2.2015 தேதிய சுற்றறிக்கையின் நகல் பக்கங்கள் 1-6 இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, புகார்தாரர் திரு. செல்லம் த/பெ முத்தையா அவர்களின் புகார் மனு மீது மாநகர ஆணையாளரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விரிவான எழுத்துப்பூர்வமான அறிக்கையினையும், ஆவணங்களுடன் தாங்களின் மேலான பரிசீலனைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. ஆகவே, உண்மைக்குப் புறம்பான இப்புகார் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 19.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.08.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 19.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் திருப்பூர் மாநகராட்சி சட்டவிதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி பெறாமலும், வாரியத்தின் அனுமதி பெறாமலும், நாய் வளர்க்கப்படுகிறது. இங்கு மொத்தம் 288 வீடுகள் உள்ளன. இங்கு ஒரு சிலர் செல்லப் பிராணிகள் என்ற பெயரில் நாய், பூனை போன்றவற்றை வளர்க்கின்றனர். இவற்றில் ஒரு வீட்டின் நாய் என்னை கடிப்பதற்காக துரத்தி வந்தது. நான் அவற்றிலிருந்து நூல் அளவில் தப்பினேன். மேலும் தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு விதிமுறைகள் குறித்த அரசாணையில் குடியிருப்பவர்களை தொல்லை செய்யும் வகையில் ஒலி எழுப்பக் கூடாது மற்றும் உள்ளாட்சி விதிமுறைகள் உட்பட்டு தான் செல்ல பிராணி வளர்க்க வேண்டும் உள்ளிட்ட விதிமுறைகள் இடம் பெற்றிருந்தன. இங்கு வளர்க்கும் நாய்களினால் அக்கம் பக்கத்தினருக்கு தொல்லைகள் அதிகமாக உள்ளது. இரவில் நாய்கள் குரைப்பதால் தூக்கம் கெடுகிறது என்பதாலும், நாய்கள் வளர்ப்பதால் துர்நாற்றம் ஏற்படுகிறது என்பதாலும், இதைப்பற்றி நாய்கள் வளர்ப்பவர்களிடம் தெரிவித்தால், சண்டைக்கு வருகிறார்கள். இவற்றினால் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படுகிறது.

இப்புகார் குறித்து 04.12.2024 நாளிட்ட கடிதத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் திருப்பூர் ஆணையர் அவர்களுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. அக்கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருப்பூர் கோட்டம் நெருப்பரிச்சல் கிராமம் பாரதி நகர் பகுதி–1–AHP குடியிருப்பு திட்டப் பகுதியில் 288 பயனாளிகளுக்கு குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்ட பகுதியில் வீட்டில் அனுமதியின்றி வளர்க்கும் நாய்கள் தொல்லை அதிகமாக உள்ளதாகவும், சாலையில் வரும் பொதுமக்களை துரத்துவதாகவும் கடிப்பதாகவும் பல தொல்லைகளை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரியம் நிர்வாக பொறியாளர் அவர்களுக்கு 04.12.2024 மற்றும் 07.01.2025–ல் மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பிரதம மந்திரியின் தனிப்பிரிவில் கோரியவாறு குடியிருப்பு திட்டப் பகுதியில் இதற்கு கடந்த 27.01.2025 தேதி அன்று நாய் வளர்ப்பவர்களின் பெயர் பட்டியல், அவர்கள் கதவு எண், பிளாக் ஆகியவற்றை குறிப்பிட்டு மீண்டும் கடிதம் அனுப்பி இருந்தேன். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

திருப்பூர் மாநகராட்சியில் 03.03.2025 அன்று திருப்பூர் மாநகராட்சி பகுதியில் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் வளர்க்கும் செல்ல பிராணிகளை முறையாக மாநகராட்சியில் பதிவு செய்து நாய் ஒன்றுக்கு ரூ 200/- உரிமம் பெறவேண்டும் என்றும் அவ்வாறு தவறும் பட்சத்தில் ரூ5,000/– முதல் 50,000/– அபராதம் விதிக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் திருப்பூர் மாநகராட்சி அலுவலர்கள் தீர்மானத்தின்படி அனுமதியின்றி வீடுகளில் வளர்க்கப்படும் நாய் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இது குறித்து புகார் மனு அளித்தும் திருப்பூர் மாநகராட்சி அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் புகார் மனு அளித்த எனக்கும் எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை.

எனவே, பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பில் அனுமதியின்றி நாய்கள் வளர்ப்பவரின் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு, திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. திருப்பூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 19.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"1. புகாரின் நிகழ்விடமான தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம், பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, திருப்பூர் என்ற இடமானது நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் ஆளுமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்பகுதியினை சுற்றுச்சுவரும், நுழைவாயிலும் இல்லாததால் தெரு நாய்கள் தடையின்றி உள்ளே வர காரணமாக அமைகிறது. அதனால் புகார் வந்த வண்ணம் உள்ளதால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களுக்கு 12.12.2024 கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

2. புகார்தாரர் திரு.செல்லம் மனு கிடைக்கப் பெறுவதற்கு முன்பே மாநகராட்சி மூலம் நாய் தொல்லைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு 01.05.2024 தேதி முதல் பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, சமத்துவபுரம் வாவிபாளையம் பகுதிகளில் தலைவர், விலங்குகள் நல வாரியம், வனம் மற்றும் சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் மிருகவதை தடை மத்திய சட்டம் 1960 பிரிவு 4–ல் கண்டுள்ள விளக்கவுரைகளின் 26.02.2025 தேதிய சுற்றறிக்கையின், அரசு வழிகாட்டுதல்படி தெரு நாய்கள் பிடிக்கப்பட்டது. இதுநாள்வரை அப்பகுதியில் (வார்டு எண் 4,5) தெருநாய்களை பிடித்து கருத்தடை செய்து மீண்டும் பிடிக்கப்பட்ட இடத்திலேயே நாய்களை இறக்கிவிட்டு அப்பகுதி மாமன்ற உறுப்பினர்கள், சுகாதார ஆய்வாளர், சுகாதார அலுவலர் மற்றும் நம்பத்தகுந்த சாட்சியாளர்களிடம் பெறப்பட்டுள்ளது.

3. பாரதி நகர், அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் நாய் வளர்ப்போர் பற்றிய கணக்கெடுக்கப்பட்டதில் மொத்தம் 9 பிளாக்கில் 288 வீடுகளில் 5 வீடுகளில் மட்டுமே செல்லப்பிராணியாக நாய்கள் வளர்க்கப்படுகிறது. நாய் வளர்க்கும் 5 வீட்டின் உரிமையாளருக்கும் தமிழ்நாடு பொதுசுகாதாரச் சட்டம் 1939 பிரிவு 41, 44–ன் கீழ் நோட்டீஸ் 17.4.2025 அன்று வழங்கப்பட்டு முறையாக மாநகராட்சியிலும், நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களிடத்திலும் அனுமதி பெற்று வழிகாட்டுதலை பின்பற்றி நாய் வளர்க்க அறிவுறுத்தப்பட்டது.

4. ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவிப்பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அனுமதி பெறாத நாய்களை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. எதிர்மனுதாரர்களில் திருப்பூர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் தலைவருக்கு 01.08.2025 நாளிட்ட அழைப்பாணை அனுப்பியும் மற்றும் மேற்கண்ட வாரியத்திற்கு தொலைபேசி மூலம் தெரிவித்தும், 19.08.2025–ல் நடைபெற்ற விசாரணைக்கு வாரியத்தைச் சேர்ந்த யாரும் ஆஜராகவில்லை.

8. மனுதாரரின் மனு, வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், திருப்பூர் கோட்டம், நெருப்பரிச்சல் கிராமம், பாரதி நகரில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் பகுதி–1–AHP குடியிருப்பில் சிலர் திருப்பூர் மாநகராட்சி சட்டவிதிமுறைகளின்படி அனுமதி பெறாமலும், மேற்கண்ட வாரியத்தின் அனுமதி பெறாமலும், செல்லப் பிராணிகளாக நாய், பூனை போன்றவை வளர்க்கப்படுகிறது என்றும், இக்குடியிருப்பில் வளர்க்கும் நாய்கள் இரவில் குரைப்பதால் அக்கம் பக்கத்தினருக்கு தூக்கம் கெடுகிறது மற்றும் அவற்றால் தொல்லைகள் அதிகமாக உள்ளது என்றும், சாலையில் வரும் பொதுமக்களை துரத்துவதாகவும் கடிப்பதாகவும் பல தொல்லைகளை ஏற்படுத்தி வருகிறது என்றும், எனவே, மேற்கண்ட பாரதி நகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்பில் அனுமதியின்றி நாய்கள் வளர்ப்பவரின் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள நிகழ்விடமான தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம், பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, திருப்பூர் என்ற இடமானது நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் ஆளுமையின் கீழ் இயங்கி வருகிறது என்பதும், இப்பகுதியில் சுற்றுச்சுவரும், நுழைவாயிலும் இல்லாததால் தெரு நாய்கள் தடையின்றி உள்ளே வர காரணமாக அமைகிறது என்பதும், அதனால் புகார் வந்த வண்ணம் உள்ளதால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய நிர்வாக பொறியாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்பதும், புகார்தாரர் மனு கிடைக்கப் பெறுவதற்கு முன்பே மாநகராட்சி மூலம் நாய் தொல்லைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு 01.05.2024 தேதி முதல் பாரதி நகர் அடுக்குமாடி குடியிருப்பு, சமத்துவபுரம் வாவிபாளையம் பகுதிகளில் விலங்குகள் நல வாரியத் தலைவர், வனம் மற்றும் சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் மிருகவதை தடை மத்திய சட்டம், 1960, பிரிவு 4–ல் கண்டுள்ள விளக்கவுரைகளின்படியும், 26.02.2025 தேதிய சுற்றறிக்கையின்படியும், அரசு வழிகாட்டுதல்படியும் தெரு நாய்கள் பிடிக்கப்பட்டது என்பதும், இதுநாள்வரை அப்பகுதியில் (வார்டு எண் 4 ,5) தெருநாய்களை பிடித்து கருத்தடை செய்து மீண்டும் பிடிக்கப்பட்ட இடத்திலேயே நாய்களை இறக்கிவிட்டு அப்பகுதி மாமன்ற உறுப்பினர்கள், சுகாதார ஆய்வாளர், சுகாதார அலுவலர் மற்றும் நம்பத்தகுந்த சாட்சியாளர்களிடம் சாட்சிகள் பெறப்பட்டுள்ளது என்பதும், பாரதி நகர், அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் நாய் வளர்ப்போர் பற்றிய கணக்கெடுக்கப்பட்டதில் மொத்தம் 9 பிளாக்கில் 288 வீடுகளில் 5 வீடுகளில் மட்டுமே செல்லப்பிராணியாக நாய்கள் வளர்க்கப்படுகிறது என்பதும், நாய் வளர்க்கும் 5 வீட்டின் உரிமையாளருக்கும் தமிழ்நாடு பொதுசுகாதாரச் சட்டம், 1939, பிரிவு 41, 44–ன் கீழ் அறிவிப்பு 17.04.2025 அன்று வழங்கப்பட்டு முறையாக மாநகராட்சியிலும், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய நிர்வாக பொறியாளரிடமும் அனுமதி பெற்று உரிய வழிகாட்டுதலை பின்பற்றி நாய் வளர்க்க அறிவுறுத்தப்பட்டது என்பதும், ஏற்கனவே மேற்கண்டவாறு வழங்கப்பட்ட அறிவிப்பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அனுமதி பெறாத நாய்களை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

திருப்பூர் கோட்டம், நெருப்பரிச்சல் கிராமம், பாரதி நகரில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் பகுதி–1–AHP-ல் உள்ள 288 பயனாளிகள் கொண்ட குடியிருப்பில் ஒரு சிலர் செல்லப் பிராணிகளாக நாய் மற்றும் பூனை அனுமதியில்லாமல் வளர்ப்பதால் அங்குள்ள பொதுமக்கள் மிகவும் தொல்லைக்குட்படுவதாக, திருப்பூர்

மாநகராட்சிக்கு புகார் வந்ததால் உரிய நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய நிர்வாக பொறியாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டும், அக்குடியிருப்பு பகுதியில் மொத்தம் 9 பிளாக்கில் 288 வீடுகளில் 5 வீடுகளில் மட்டுமே செல்லப்பிராணியாக நாய்கள் வளர்க்கப்படும் உரிமையாளருக்கு தமிழ்நாடு பொதுசுகாதாரச் சட்டம், 1939, பிரிவு 41 மற்றும் 44–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும், முறையாக மாநகராட்சியிலும், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய நிர்வாக பொறியாளரிடமும் அனுமதி பெற்று உரிய வழிகாட்டுதலை பின்பற்றி நாய் வளர்க்க அறிவுறுத்தப்பட்டது என்றும் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கையிலும், மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ள நிலையில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் விதிமுறைகளின்படியும் மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படியும் மனுதாரரின் புகார் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. M. செல்லம்,
கதவு எண் 50, பிளாக் 2, பாரதிநகர் அடுக்குமாடி குடியிருப்பு,
வாவிபாளையம் (P.O.), திருப்பூர்–641 666.

(2) தலைவர்,
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்,
பாரதி நகர் குடியிருப்போர் நலச் சங்கம், நெருப்பெரிச்சல், திருப்பூர்–641 666.

(3) ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

13/11/25

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032